www.tamilarangam.net

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு-22 05 பங்குனி 2005 விலை:- 07.00

இரத்த களரியற்ற சாந்தியும் சமாதானமும் நிலவும் புதிய தேசத்திற்காக எம்மை அர்ப்பணிப்போம்.

# நாடெங்கே போகிறது

சுனாமியை பார்த்த பின்னரும் திருந்தாதவர்கள் இனிமேலும் திருந்துவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறதா என்றால் அது மிகுந்த சந்தேகத்திற்குரியதே, சுனாமி மக்களிடையே பேதங்களை களைந்து விடும் தமிழன், சிங்களவன், முஸ்லிம், கிறிஸ்தவன் என்ற குரோதங்களை கரைத்து விடும் என்று தான் நினைத்திருந்தோம்.



சுனாமி வந்த அடுத்த அடுத்த நாள் மிகுந்த சோக மயமாக காணப்பட்டது உண்மையே, வெள்ளைக் கொடிகள் பரவலாக காணப்பட்டன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவேண்டும் என்ற உந்துதல் காணப்பட்டது. சிங்கள மக்களும் மலையக மக்களும் வடக்கு கிழக்கிற்கு பொருட்களை அனுப்பி வைத்தார்கள், நேரடியாக கொண்டு சென்றும் கொடுத்தார்கள். பொருட்களை சேகரித்த பல்வேறு ஊடக நிறுவனங்கள் மற்றும் குழுக்களுக்கு வாரி வழங்கினார்கள்.

பிள்ளை பிடியும் கப்பமும் எப்போது நாம் எமது சொந்த இடத்தை விட்டு வெளிக்கிட்டு போகவேண்டி வரும் என்ற பீதியுடன் கிழக்கில் முஸ்லீம் மக்கள் இருந்தார்கள் சகோதரப்படுகொலை மும்முரமாக நடைபெறுக் கொண்டிருந்தது, சுனாமியின் பின்னாவது இந்த அரக்க குணம் அகன்று போகாதா என மனித உரிமை ஜனநாயக ஆர்வலர்கள் கனாக்கண்டு கொண்டிருந்தார்கள் ஆனால் அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

சுனாமி அனர்த்தின் பின்னர் வடக்கு கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அனர்த்த நிவாரணப் பொருட்களை தம்மிடமே ஒப்படைக்க வேண்டும் என்று அடம்பிடித்தார்கள், சுனாமி நிவாரணப் பொருட்களுடன் வடக்கு கிழக்கிற்கு சென்ற லொறிகளை புலிகள் கடத்தவும் செய்தார்கள், சுனாமியால் பாதிப்புற்றோருக்கு சமைத்த உணவு பெறுவதற்காகக் தலா ஒருவருக்கு வழங்கப்பட்ட 40ரூபா காசையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை.

தென்மராட்சி வீடுகளிலும் செல்வச்சந்நிதிகோயில்களிலும் சமைத்த உணவை வாங்கி வழங்கி விட்டு தலா 40 ரூபாவை தமது கஜானாவில் சேர்க்கும் வர்த்தக முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். படையினர் வழங்கிய உணவு பார்சல்களுக்கும் பணம் பெற்றுக் கொண்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

தற்போது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணி தற்காலிக இருப்பிடங்கள் கட்டிக் கொடுப்பதில் அல்லாடுகிறது. அரச உதவி, சர்வதேச சமூகத்தின் நேரடி உதவி, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி ஒருபுறமிருக்க

தொடர்ச்சி 3ம் பக்கம்



இந்திய உயர்ஸ்தானியர் திருமதி நிருபமா ராவ் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்களை இராமகிருஷ்ணமிசன் ஊடாக வழங்குகிறார்.



16-01-2005 ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகத்தில் திரு. இராமச்சந்திரன், திரு. பாஸ்கரன், திரு. பத்மநாதன் உட்பட இரா. துரைரெத்தினம் தலைமையில் வெளிநாட்டில் உள்ள தோழர்களால் வழங்கப்பட்ட நிதி உதவியை வேளாங்கன்னிபுர மக்களுக்கு (கல்லடி, மட்டக்களப்பு) வழங்கும் போது.

# சமாதானமும் சுனாமியும்

சுனாமி எமது நாட்டை உலுக்கிய பின் மனிதப் பேரழிவை ஏற்படுத்திய தன் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக சூழ்நிலை வேறுபட்ட ஒன்றாகும். உலகின் சராசரி மூன்றாம் உலகநாடுகள் எதிர்நோக்குவதைவிட மிகப்பெரிய சவாலாகும். யுத்தத்தினால் அழிந்த நாட்டை மீள்கட்டியெழுப்பும் சவாலுக்கு மத்தியிலேயே ஒரு நொடியில் நேர்ந்த பேரழிவுச்சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையின் எதிர்கால சுபிட்சத்திற்காக மாத்திரமல்ல யுத்தத்தாலும், கணப்பொழுதில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவிலிருந்து மீள்வதற்கும் எமது வாழ்வு ஜனநாயக மயப்படுத்தப்படுவது முக்கியமானதாகும். பிரித்தானியர் எமக்கு முழுசமாக தந்துவிட்டுப்போன அதிகாரக் கட்டமைப்பின் போதாமையை நாம் தற்போது கண்டு கொண்டிருக்கிறோம்.

ஒரு பேரனர்த்தத்தில் சிக்குண்ட மக்களின் வாழ்வை மீட்பதில் அந்த போதாமை உணரப்படுகிறது. 75வீதம் வறிய மக்களின் வாழ்வை சுனாமி சூறையாடியிருக்கிறது போதிய அளவு சர்வதேச, உள்ளூர் உதவிகள் கிடைக்கின்றன. எனினும் அதிகாரக்கட்டமைப்பு அந்த மக்களுக்கு எதையும் உருப்படியாக சென்றடைவதில் தடங்கல்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே” எனவே காலாவதியானவற்றை களைந்தெறிந்து விட்டு நாம் சவால்களை எதிர்கொள்ளத்தயாராக வேண்டும். தேவைக்கேற்ப எமது நிர்வாக கட்டமைப்புக்களில் மறு சீரமைப்பைச் செய்யவேண்டும்.

அதற்கு அரசியல் யாப்பு மாற்றப்படுவது முக்கியமானால் அதனை செய்வதற்கும் இலங்கையின் பொறுப்புவாய்ந்த அரசி



யல் கட்சிகளும் சமூக அக்கறை கொண்ட கல்விமான்கள் மற்றும் சிவில் சமூகத்தாரும் தயாராக வேண்டும். பிரமிட் வடிவிலான எமது அதிகார கட்டமைப்பு சாதாரண மக்களை எப்போதும் இரண்டாம் பட்சமானதாகவே கருதுகிறது.


தொடர்ச்சி 2ம் பக்கம்

## சர்வதேசம் வாழ் எம் தோழர்களுக்கு

சுனாமியால் பேரனர்த்தத்தை சந்தித்த எம் மக்களின் இடர் நிவாரண பணிகளுக்காக சுமார் ஒரு மில்லியன் ரூபா வரை உடனடியாக உதவிய சர்வதேசம் வாழ் எம் உறவுகளுக்கு எமது மனமார்ந்த நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்கிறோம்.

மட்டக்களப்பு திருகோணமலை வாழ் பாதிப்புற்ற மக்களுக்கு அந்த பேருதவி பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

# கண்ணோட்டம்



## மனிதாபிமானம்

இலங்கையில் சுனாமிக்கு பிந்திய அரசியல் சமூக பொருளாதார மாற்றங்கள் கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும். இலங்கையின் வரலாறு கண்டிராத சுனாமி பேரனர்த்தம் சமூகத்தில் நிலவிய பிரபலமான முரண்பாடுகளுக்கு அப்பால் மனிதாபிமானம், சிறிது காலத்திற்கு மேலோங்கிக் காணப்பட்டது. இன, மொழி, மத பேதங்களுக்கப்பால் மக்களின் ஐக்கியம் என்பது சிறு ஒளிக்கீற்றாய் காணப்பட்டது. ஆனால் அந்த அருமையான சந்தர்ப்பம் சூழ்நிலை காட்சி மறைந்து விடுமோ என்ற ஐயமும் எழாமல் இல்லை.

சாதாரண மனிதர்கள் இயல்பான மனித உணர்வுகளுடன் நடந்து கொண்டாலும் அரசியல் ஆயுத கட்டமைப்புக்கள் தம்மை மாற்றிக் கொள்ளவில்லை. புலிகளை பொறுத்தவரை ஏறத்தாழ 40,000 பேர் நாட்டில் உயிரிழந்திருந்தும் அதிலும் 60 வீதமானோர் வடக்கு கிழக்கில் உயிரிழந்திருந்தும் அவர்களது மக்கள் மீதான வரிச்சுமைகளையோ யுத்தத்திற்கான சிறுவர் சிறுமியரை அணிதிரட்டுவதையோ, சகோதரப் படுகொலைகளையோ கைவிடவில்லை. அவை அப்படியே தொடர்ந்தது சுனாமி அனர்த்த அவலமும் இரத்தகளறியும் என்ற நிலைதான் துரதிஷ்டவசமாக வடக்கு கிழக்கில் காணப்படுகிறது. மக்களின் நலன்களில் அக்கறையுள்ளவர்கள் கடைசி வரையும் இத்தகைய மோசமான செயல்களில் ஈடுபட முடியாது. சுயநல குறுகிய எண்ணங் கொண்டவர்களே இவ்வாறு செயற்பட முடியும்.

25 வருட யுத்தத்தினாலும் சுனாமியினாலும் பேரழிவை சந்தித்திருக்கும் சமூகத்தை புத்துயிர் பெற்று எழுவதற்கான வழிவகைகளை கண்டறிவதில் அக்கறை செலுத்தாதவர்கள் எவ்வாறு மனிதநேயமிக்கவர்களாக இருக்க முடியும். வடக்கு கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்மையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் இருப்பிடங்களை தமது இருப்பிடங்களாக மாற்றியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஆக்கபூர்வமான செயற்பாடுகளை தவிர்த்து தமது சுய விளம்பரத்துக்கான செயற்பாடுகளிலேயே அவர்கள் அக்கறை செலுத்தினார்கள்.

மக்கள் சந்தித்த அழிவின் தாற்பரியத்தை புரிந்து கொள்ளாமையிலிருந்து இப்பிரச்சினை எழுகிறது. மக்களின் பிரதிநிதிகள் என்பதைவிட புலிகளின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேறு எதைத்தான் பார்க்க முடியும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவற்றை செய்து கொடுக்கவேண்டும் என்பதில் இவர்களிடம் எந்தத் தெளிவும் இல்லை. சாதாரண சக சமூக மனிதர்களுக்கு இருக்கக்கூடிய உணர்வுகள்கூட இவர்களிடம் இல்லை. புலிகள் வடக்கு கிழக்கில் அதிகாரத்தை முற்றுமுழுதாக தமது கைகளில் கொண்டு வருவதற்கு என்ன செய்ய முடியுமோ அதனையே இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பாதிப்பு ஒருபுறமிருக்க இலங்கையின் சனத்தொகை வீதாசாரத்திரல் கணிசமான அளவு பாதிப்புக்களை சந்தித்த முஸ்லீம் மக்கள் சந்தித்த பேரழிவு இங்கு கவனத்திற்குரியதாகும்.

சுனாமியால் இலங்கையின் சகல இன மக்களுமே பேரனர்த்தத்தை சந்தித்திருக்கின்றபோது இலங்கை சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளை களைந்து இப்புதிய சவாலை எதிர்கொள்வதற்கும் நாம் தயாராக வேண்டும்.

காலம் காலமாக புரையோடிப் போயிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இதயசுத்தியுடன் சகல தரப்பினரும் செயற்பட வேண்டும்.

சமூகத்தின் தலைவிதியை தாங்கள்தான் தீர்மானிப்பவர்கள் என்று ஏகபோக உரிமை கோரும் அராஜகம் அனுமதிக்க முடியாது. ஜனநாயக நெறிமுறைகளினூடாக வேகமாகவும், விவேகமாகவும் இலங்கையின் பாராதூரமான சமூக அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். இனவாத மதவாத போக்குகளை நிராகரித்து பரந்துபட்ட நோக்கின் அடிப்படையில் விஞ்ஞானபூர்வமாக தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

# சமாதானமும் சுனா...........

1ம் பக்கத் தொடர்ச்சி

உலகின் பல நாடுகளில் மக்களை முதன்மைப்படுத்திய கட்டமைப்புக்கள் இருக்கின்றன. அத்தகைய கட்டமைப்பு இன்று அவசர அவசியமானதாகும். சேவைத்துறை மற்றும் சிவில் நிர்வாகம் சாதாரண மனிதர்களின் உணர்வுகளுக்கு, கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதாக உருவாக்கப்பட வேண்டும்.

தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக நீங்கள்தான் தெய்வங்கள் என்பது போல் மக்களின் வீட்டு வாசலுக்கு அரசியல்வாதிகள் செல்கிறார்கள். அதன்பின்னர் மக்களுக்கு எந்தமுகமும் இருப்பதில்லை. பொத்தம் பொதுவில் மக்கள் என்று பேசும் போது அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் பரிவுடன் பேசுகிறார்கள்.

ஆனால் தனிப்பட அணுகும் போது அவர்கள் வெகுஜனங்களுடன் சினம் கொள்கிறார்கள். நிலப்பிரபுத்துவகுணாம்சங்களுடன் அடிமைகளுடன் நடந்து கொள்வது போல் அவர்களின் நடத்தைகள் அமைகின்றன. சிறியதோ, பெரியதோ மக்களின் குரலுக்கு இடமளிக்க கூடிய அத்தனை ஸ்தாபனங்களுக்கும் புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். சாதாரண மக்களின் குரல்களுக்கு, கருத்துக்களுக்கு செயற்பாடுகளுக்கு இடமளிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பதும் அந்த வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. சமூக வாழ்வு ஜனநாயகமயப்படுத்தப்படுவதிலேயே நாடளாவிய வளர்ச்சி என்பது சாத்தியமானதாகும்.

சுனாமி என்ற பேரழிவிலிருந்து மீள்வதாக இருந்தாலும் சரி, இன உறவுகளை பலப்படுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதாக இருந்தாலும் சரி முழுநாடும் தன்னை அர்பணிக்கத் தயாராக வேண்டும்.

இந்த நாடு நோஞ்சானாக இல்லாமல் வீரியத்துடன் எழுந்து நிற்பதற்கு இது மிக அவசியமாகும். இந்தியாவும், உலகமும் எமக்கு கைகொடுக்கும் நிலையில் இருக்கும்போது சகல மக்களும் இன, மத பேதங்களை மறந்து நிற்கும் போது இதைவிட சிறந்த ஒரு சூழ்நிலை ஏற்படுமா என்பது சந்தேகமே.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் முற்றுமுழுதான ஜனநாயக சூழ் நிலை ஒன்று பாதுகாக்கப்படுவதும் இன்றைய அவலங்களிலிருந்து மீள்வதற்கு எமக்கு அவசியமான நிபந்தனைகளாகும்.

# ஈபிஆர்எல்எப் இன் முதுபெரும் தோழர் வல்லிசுந்தரம் ஐயா



தோழர் வல்லி சுந்தரம் ஐயா தனது முதிய வயதிலிலும் சமூகத்திற்கான தனது அர்ப்பணிப்பை, பணியை அவர் கைவிடவில்லை. அவர் மரணிக்கும்போது அவருக்கு வயது 61. எப்போதும் இடையுறாது "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று வாழ்ந்தவர்.

அவர் ஆரம்பத்தில் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையில் தொழிற்சங்கவாதியாக தனது சமூகப்பணியை ஆரம்பித்திருந்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்களில் பங்குபற்றியவர்.

அவர் குறிப்பாக தெற்கு வடக்கு வலிகாமம் பகுதிகளிலும் பரவலாக யாழ்குடாநாட்டிலும் சமூகப் பணிகளை ஆற்றியவர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதுபெரும் உறுப்பினராக வடக்கு வலிகாமம் பிரதேச சபையின் அங்கத்தவராக இருந்து மக்களுக்கு அரும்பணி ஆற்றியவர். ஊடகத்துறையிலும் ஈடுபாடு உடையவர்.

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் வல்லி சுந்தரம் ஐயா அவர்கள் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவர்.

சில மாதங்களுக்கு முன் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த படுகொலையானது சமூகத்தில் சிறந்த மனிதர்கள், மனித உரிமையாளர்கள், மாற்றுக்கருத்து கொண்டோரை அழித்தொழிக்கும் பாசிசச் செயற்பாட்டின் அங்கமாகும். தோழர் வல்லிசுந்தரம் ஐயா அவர்கள் ஜனநாயகம் மனித உரிமைகளுக்காக வெளிப்படையாகவே குரல்கொடுத்து வந்தவர்.

ஒரு வழிகாட்டியாக ஒரு தந்தையைப்போன்று தோழர்களை நேசித்தவர்

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**
**France.**

**E.P.I.C., Box No: 0362**
**71603 Ludwigsburg,**
**Germany.**

**B.M. Box No: 1738**
**London - Wcix - 3nn,**
**U.k.**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

**310 ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.**
**☎ 021 222 2022,**

**29 ஏ, வாவிக்கரை வீதி**
**மட்டக்களப்பு.**
**☎ 065 22 22307**

**No: 159, கடல்முக வீதி**
**திருகோணமலை.**
**☎ 026 22 27118**

**141A, மன்னார் ரோட்**
**குருமன்காடு,**
**வவுனியா.**
**☎ 024 22 23102**

**சென்செபஸ்த்தியார் வீதி**
**மன்னார்.**
**☎ 023 22 32822**

# கனடா: புலிகள் இயக்கமானது சிறுவர்களை படையினராக சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை நிறுத்த வேண்டுமமென பிரதம மந்திரி அவர்களை கோர வேண்டும்.

(டொரன்ரோ, பெப்ரவரி9,2005) புலிகள் இயக்கமானது தொடர்ந்தும் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்றும் தற்போது அவர்களின் படையணிகளில் உள்ள சகல சிறார்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் பிரதம மந்திரி போல் மார்ட்டின் உடனடியாக பகிரங்க கோரிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் எனக் கோரும் கடிதம் ஒன்றை முன்னாள் கனேடிய வெளிவிவகார அமைச்சர் Lloyd Axworthy யும் ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பும் அனுப்பி வைத்துள்ளன.

"யுத்த காலததில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களின் காரணமாக வெளியேறிய பல்லாயிரக் கணக்கான தமிழர்களுக்கு கனடா புகலிடம் கொடுத்துள்ளது'' எனக் கூறும் ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பின் சிறார்கள் உரிமை தொடர்பான நியாயப் பிரச்சாரப் பணிப்பாளர் ஜோ பெக்கர், "புலிகள் இயக்கத்தினால் தொடர்ந்தும் தமிழ்ச் சிறார்கள் பிடித்துச் செல்லப்பட்டு அவர்கள் படையினராக பாவிக்கப்படும் நடவடிக்கை பற்றியும் கனடா பிரஸ்தாபிக்க வேண்டும்'' என மேலும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என உத்தியோகபூர்வமாக அறியப்படும் புலிகள் இயக்கத்தினால் மிகத் தீவிரமாக சிறார்கள் பிடித்துச் செல்லப்பட்டது தொடர்பாக ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பானது 2004ம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கையில் மிக விரிவாக ஆவணப்படுத்தி உள்ளது.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் குடும்பங்கள் தமது பிள்ளைகளை புலிகள் இயக்கத்தின் படையணிகளில் சேர்ந்து இயங்குவதற்கு மறுப்பு தெரிவிக்கின்ற பட்சத்தில் புலிகள் இயக்கமானது எவ்வாறு அவர்கள் மீது அழுத்தங்களையும் அச்சுறுத்தல்களையும் நெருக்குவாரங்களையும் மேற்கொள்கின்றனர் என்பதை பல முன்னாள் சிறார் படையினரே விபரிக்கும் விடயங்களும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

சுனாமி அழிவின் பின்னரும் புலிகள் இயக்கமானது தொடர்ந்தும் சிறார்களை பிடித்து செல்கின்றனர். சுனாமி பேரழிவு நிகழ்ந்த கடந்த டிசம்பர் 26ம் திகதிக்கு பின்னர் புலிகள் இயக்கமானது சிறார்களை பிடித்துச் சென்ற 40இற்கு மேலான சம்பவங்களை யுனிசெப் நிறுவனம் பதிவு செய்துள்ளது. இவர்களில் பலர் சுனாமியில் இருந்து உயிர் தப்பியவர்களுக்காக அமைக்கப்பட்ட நிவாரண முகாம்களில் இருந்தே பிடித்த செல்லப்பட்டுள்ளனர்.



ஐ.நா சிறுவர் நிதியத்தின் பிரதிநிதி சிறுமியுடன் உரையாடுகிறார்

புலிகள் இயக்கமும் அவர்களின் மனிதாபிமான பிரிவான தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தமிழ்ப் பகுதிகளில் உள்ள நிவாரணப் பணிகள், முகாம்கள் மற்றும் அநாதை இல்லங்கள் என்பவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மேற்கொள்ளும் முயற்சிகளை முடிவுக்கு கொண்டு வருவதோடு, பக்க சார்பற்ற உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் எவ்வித தங்கு தடையுமின்றி தமது பணிகளை மேற்கொள்வதற்கு இடமளிக்க வேண்டும் என்றும் பிரதம மந்திரி அவர்களைக் கோர வேண்டும் என ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பு வலியுறுத்தி உள்ளது. அத்தோடு எதிர்வரும் காலத்தில் நடக்கக்கூடிய எந்த விதமான சமாதானப் பேச்சுக்களிலும் இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விடயத்தை பிரதான ஓர் விடயதானமாக உள்ளடக்குவதற்கு கனடாவின் ஆதரவை தெரிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி நிற்கின்றது.

ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பின் சர்வதேச பணிப்பாளர் சபையில் பணியாற்றும் கலாநிதி Axworthy அவர்களுக்கும் மேலதிகமாக ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பின் டொரன்ரோ கமிட்டியின் பணிப்பாளர் Jasmine Herlt, டொரண்ரோ பல்கலைகழகத்தின் சட்டபீட சர்வதேச மனித உரிமைகளுக்கான வேலைத்திட்ட பணிப்பாளரும் றொறண்டோ கமிட்டியின் நியாயப்பிரச்சார இணைத்தலைவருமான Noah Novogrodsky ஆகியோர் இக்கடிதத்தில் கையொப்பம் இட்டுள்ளனர்.

# நாடெங்கே...................

1ம் பக்கத் தொடர்ச்சி

புலிகளின் முகவர் அமைப்பான ரிஆர்ஓ அமைப்பிற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் வாரி வழங்கிய டொலரும், யூரோவும் எங்கு சென்றது என்பது புரியாத புதிராகத்தான் இருக்கிறது.

இந்த நிலையில் வடக்கு கிழக்கிற்காக சுனாமி நிவாரண பணிகளை தம்மிடம் விட்டு விடுமாறு புலிகள் கோரி வருகின்றனர். வடக்கு கிழக்கில் சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான ''மெக்கானிசம்'' வேண்டும் என்று கோரி வருகிறார்கள். அது முஸ்லிம்களுக்கும் சேர்த்துதான் அவர்கள் கோருகிறார்கள் அரசியல் தீர்வு சமாதானம் எல்லாம் பிறகு இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான கட்டமைப்பையே அவர்கள் கோரி நிற்கிறார்கள்.

தமிழ்செல்வன் நோர்வேகாரர்களிடமும் புலித்தேவன் சமாதானச் செயலகத்திடமும் இதனை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் இதற்கிடையே சுனாமியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினை தேசிய அளவில் அணுகப்பட வேண்டும் என்று முஸ்லீம் தலைவர்களும் வலியுறுத்தி வருகிறார்கள் ஹக்கீம் இதனைத் திரும்ப திரும்ப கூறுகிறார்.

ஆனால் கௌசல்யனின் மரணச்சடங்கிற்கு கிழக்கிற்குச் சென்ற தமிழ்ச்செல்வன் முஸ்லீம் சமூகப் பெரியவர்களை சந்தித்து உறவு கொண்டாடினார். நாம் எல்லாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் அல்லவோ என்று புளகாகிதமடைந்தார். ஆனால் முஸ்லீம் அரசியல் தலைமைத்துவங்களை வெட்டியோடி முஸ்லீம்களை புலிகளின் அரசியல் சதுரங்கத்திற்குள் பயன்படுத்தும் முயற்சியாகவே இந்த புத்துறவு பிரபலபடுத்தப் பட்டது. கருணாவின் பிரவேசத்தால் கிழக்கில் பிரபாகரன்சார் புலிகளின் நிலைமை கலகலத்துப் போயுள்ளது

இதற்கிடையே சுனாமிக்குப் பின்னர் ஜே.வி.பி யினரும் களத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் தமது தொண்டர் அணிகளையே நூற்றுக் கணக்கில் தெற்கிலும் கிழக்கிலும் இறக்கியுள்ளார்கள்.

இந்த சூழ்நிலையில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு மூன்றாண்டு ஒப்பேறியது தொடர்பான நிகழ்ச்சியொன்று தேசிய சமாதானப் பேரவையினால் கொழும்பு நகர மண்டபத்தில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய இலங்கை அரசின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் சுனாமி இடர் தீர்ப்பு பணிகளுக்கான இணைந்த "ஜோயின்ட் மெக்கானிசம்" தொடர்பாகவும் நிரந்தர தீர்வு தொடர்பாகவும் பேசியிருந்தார்.

ஐக்கிய சுதந்திர முன்னணி அரசு ஒஸ்லோ தீர்மானத்தினடிப் படையிலான தீர்வை ஏற்கனவே வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் புலிகள் அதனை நிராகரித்திருந்தார்கள். புலிகளின் ஏக பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் இடைக்கால தீர்வு யோசனையை தொடர்ந்து உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டு இருந்தனர்.

தமிழ் ஊடகங்களும் புலி ஆதரவு கல்விமான்களும் இதனை வழங்குமாறு தொடர்ந்து எழுதியும், பேசியும் வருகின்றனர். இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் பல அரசியல் கட்சிகள் செயற்படும் ஜனநாயகத்திற்கும் தமிழ் முஸ்லீம் சிங்களம் என்ற பல்வேறு சமூகங்கள் வடக்கு கிழக்கில் வாழும் யதார்த்தத்திற்கும் முரணானதாகும்.

2000 ம் ஆண்டு ஜனாதிபதி முன்வைத்த சமஷ்டி யோசனைகளை பாராளுமன்ற மேசையில் தீயிட்டுக் கொளுத்திய ஐ.தே.க இந்த புலிகளின் இடைக்கால தீர்வு யோசனைகளுக்கு தம்மை சாதகமாக காட்டிக்கொள்வதே உண்மையாகும்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு ஒற்றையாட்சி கட்டமைப்பின்கீழ் 13வது திருத்தச் சட்டமூலத்தினடிப்படையில் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதை நிராகரித்த ஐ.தே.க இந்த இடைக்கால யோசனைகளை ஆதரிப்பது தெற்கில் அவர்களின் அன்றாட அரசியலுக்காகவே என்பது சொல்லாமலே புரிந்துக் கொள்ளக்கூடியது.

ஜே.வி.பி யை பொறுத்தவரையில் அவர்கள் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலாவின் கூற்றுத் தொடர்பாக தமது வேறுபட்ட நிலைப்பாட்டை தெரிவித்திருப்பினும் நிரந்தர தீர்வு பற்றி பேச முடியும் என்று அவர்கள் தெரிவித்திருப்பது முன்னேற்றகரமானதொரு நிலைப்பாடாகும். சுனாமியின் பின்னான அவர்களுடைய பாரபட்சமற்ற அர்ப்பணத்துடன் கூடிய செயற்பாடுகள் கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்களிடம் அவர்கள் மீது ஒரு அபிமானத்தை ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மையாகும்.

இதற்கிடையே இந்தியா இலங்கையில் சுனாமியின் பின்னர் இடர் நிவாரண பணிகளில் உடனடியாக செயற்பட்டதற்கு நன்றி செலுத்துவதற்கான ஜனாதிபதியின் விசேட செய்தியை டெல்லிக்கு எடுத்துச் சென்ற இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் புலமைத்துவ பங்களிப்பையும் வழங்க வேண்டும் என்று கேட்டிருந்தார். அத்தோடு எமது நெருங்கிய உறவுகள் இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மறுபுறம் சுனாமியின் பின்னர் மீண்டும் புலிகளின் மனித உரிமை மீறல்கள் பற்றிய பிரச்சினைகள் சர்வதேச அக்கறைக் குரியனவாக இருந்தன. யுனிசெவ் நிறுவனம் சுனாமி அகதி முகாம்களில் சிறுவர்கள் புலிகளால் பிடித்துச் செல்லப்படுவதை சுட்டிக்காட்டியிருந்தது.

ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான், சிறுவர் உரிமைக்கான பிரதிநிதி ஒலரா ஒட்டுண்ணு ஆகியோர் புலிகள் சிறுவர்களை தொடர்ந்து பிடிப்பது பற்றி ஐ.நா பாதுகாப்புச்சபையின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். பாடசாலைகள், கோயில் திருவிழாக்கள், வீடுகள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் வைத்து சிறுவர்கள் கைது செய்யப்படுவதை சுட்டிக் காட்டியிருந்தனர். பெற்றோரும் ஆசிரியரும் சிறுவர் சிறுமியரும் துன்புறுத்தப்பட்ட சம்பவங்களை அவர்கள் நினைவூட்டியிருந்தனர்.

கடந்த பெப்ரவரி 23ம் திகதி பாதுகாப்புச் சபையிலும் இது விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஐ.நா செயலாளர் நாயகத்தின் பரிந்துரைகளான பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, நிதித்தடை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. புலிகள் சிறுவர்களை அணிதிரட்டுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

கனடாவிலும் புலிகளின் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அரசியல் படுகொலைகள் தொடர்பான காரணங்களுக்காக தடைசெய்வது பற்றி பரிசீலிக்கப் பட்டது. பின்னர் இலங்கையில் சமாதான முயற்சிகள் நடைபெறுவதாக நோர்வே அமெரிக்கா போன்ற நாடுகள் பரிந்துரைத்ததற்கு இணங்க அந்த தடை நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டது.

மீண்டும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பு அமைப்பில் புலிகள் சிறுவர்களை அணிதிரட்டுவது, அரசியல் எதிராளிகளை படுகொலை செய்வது பற்றி சர்வதேச மனித உரிமை கண்காணிப்பு அமைப்பின் அறிக்கையில் மிகுந்த விசனத்துடன் சுட்டிக்காட்டி இருந்தது.

இனப் பிரச்சினை தீர்வு இழுபட்டுக்கொண்டு போவது ஒருபுறமிருக்க வடக்கு கிழக்கு வாழ் மக்கள் மீது 25 வருட யுத்தத்தின் சுமைகளுடன் யுத்தத்தின் சுவடுகளுடன் தற்போது சுனாமியின் சுவடுகளும் சுமைகளாக இறங்கியுள்ளன. ஆனால் புலிகள் தமது மனித உரிமை ஜனநாயக விரோத செயற்பாடுகளை கைவிடுமாறு போலில்லை. அவர்கள் அதனை விஸ்தரித்துக் கொண்டே செல்கிறார்கள். சமூகத்தை அவநம்பிக்கையினுள்ளும் விரக்தியினுள்ளும் மனவிகாரத்தினுள்ளும் தள்ளும் இந்த பாசிச செயற்பாடுகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படுவது மற்றைய முக்கிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அவசிய நிபந்தனைகளாக அமைகின்றன.

# ஈ.பி.ஆர்.எல்.எவ்-பத்மநாபா தோழர்கள் சுனாமி நிவாரணப்பணிகளில்



• 26-12-2005 அன்று அதிகாலை நடந்த சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழப்புக்கு உள்ளாகி அழிந்த பகுதிகளுக்கு அன்று மதிய வேளைக்குப் பின்பு உடல்களை மீட்கும் பணியில் எமது ஈ.பி.ஆர்.எல்.எப் தோழர்களான சந்திரன், பாஸ்கரன், பத்மநாதன் தலைமையில் சுமார் 50உறுப்பினர்கள் இரவு பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டனர். எமது கட்சியின் இச் செயல்பாடானது சுமார் 29 திகதி வரை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

• 30-12-2005 நகரப்பகுதில் உள்ள அனைத்து முகாம்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்ததோடு அவர்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யுமுகமாக



பொது நிறுவனங்களினதும் அதிகாரிகளினதும் கவனததிற்கு எடுத்துச் சென்றது. எமது அலுவலகத்தில் சமைத்த உணவு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது. 30-12-2004 தொடக்கம் 04-01-2005 வரையில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

• 04-01-2005 தொடக்கம் 05-01-2005 வரை பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களை சேகரித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து விவரங்கள் தொகுக்கப்பட்டு பின்பு அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையில் எம்மால் இயன்றவரை ஈடுபட்டமை குறிப்பாக இந்த அனர்த்தத்தினால் மறைமுகமாக பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கான குறைநிறைகளை தீர்க்க நடவடிக்கையில் இவ் வேலைத்திட்டம் 10-01-205 வரை நீடித்தது.

• 13-01-2005 அன்று ஈ.பி.ஆர்.எல்.எப் அலுவலகத்தில் வைத்து காலை 11.00 மணிக்கு மட்டக்களப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 43 கிராமங்களிலும் சிறு மீன் விற்பனை வியாபாரம்செய்யும் (நடையிலும், துவிச்சக்கர வண்டியிலும்) அனைவருக்கும் உலர் உணவு வழங்கியமை. இவர்கள் அனைவரும் இயற்கை கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கடந்து 26ம் திகதியில் இருந்து எவ்வித வருமானமும் அற்ற நிலையில் இருந்தவர்களுக்கு தோழர் இராமச்சந்திரன் தலைமையில் உலர் உணவு வழங்கப்பட்டது.

• 14-01-2005 அன்று புதூர், வீச்சுக்கல்முனை, வலையிறவு, திமிலைத்தீவு, சேத்துக்குடா ஆகிய கிராமங்களில் முழு நேரமாக (குளம், ஆறு) மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட, தொழில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தென்னிலங்கையில் இருந்து உதவிக் கரம் நீட்டிய பல்கலைகழக விரிவுரையாளர்கள், நாடகக் கலைஞர்கள் ஆகியோருடன் சேந்து இரா.துரைரட்ணம் தலைமையில் உலர் உணவு வழங்கப்பட்டது.

• 14-01-2005 மாலை ஈ.பி.ஆர்.எல்.எப்ப பிராந்திய அலுவலகத்தில் வேளாங்கண்ணிபுரம் கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட குடும்பத்தினருக்கு உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக சுமார் 150 குடும்பத்தினருக்கு தலா 2000 ரூபா வீதம் இரா.துரைரட்ணம் தலைமையில் (ராமச்சந்திரன், பாஸ்கரன், பத்மநாதன் போன்ற முக்கிய சிரேஷ்ட உறுப்பினர்களின் பங்கு பற்றலுடன் நிதி வழங்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கும், அவர்களுக்கு இருப்பிடம், தொழில் வாய்ப்பு, சிரமதானப்பணிகள் போன்றவற்றுக்கும் உதவி வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கிராமத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்ப இன் நேரடி பராமரிப்பில் இருந்து வந்த பாலர் பாடசாலை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் வேறொரு இடத்தில் புதிதாக அமைத்துதர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிதியுதவியை வழங்கிய வெளிநாடுகளில் உள்ள உறுப்பினர்கள், ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.



• 15-01-2005 மட்டக்களப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கோட்டைமுனை, பிரதேச சங்கங்களான புதுப்பாலம், பழையபாலம், முரசாப்பிட்டி, கல்லடித்தெரு, சின்ன ஊறணி போன்ற சங்கங்களுக்கு சுமார் 200 மீனவக் குடும்பங்களுக்கு இரா.துரைரட்ணம் தலைமையில் உலர் உணவு வழங்கப்பட்டதோடு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அவர்களின் தொழில் பாதிப்பு சம்பந்தமாக ஆலோசனை கூட்டமும், பாராளுமன்ற உறுப்பினர் திரு அபயசிங்க தலைமையில் நடைபெற்றது

• 16-01-2005 மன்முனை வடக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட வருமானமற்ற, பாதிப்புக்குள்ளான வண்டித் தொழிலாளர் சங்கம், ஈ.பி.ஆர்.எல்.எப்ப அலுவலகத்தில் பத்மநாதன் தலைமையில் உலர் உணவு வழங்கப்பட்டு அவர்களின் தொழில் ஊக்குவிக்கும் முகமாக ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது.

• 17-01-2005 மட்டக்களப்பு நகர்புறத்தில் உள்ள ஆட்டோ சாரதிகளுக்கு தொழில் செய்ய முடியாமல் இருந்த சூழ்நிலையில் ஆட்டோகாரரின் வேண்டுகோளுக்கு இணங்க உலர் உணவு வழங்கப்பட்டது.

• 18-01-2005 எதுவித உழைப்பும் வருமானமும் இன்றி பாதிக்கப்பட்ட மட்டு நகர்ப்புற சுமைதூக்கும் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் தோழர் பாஸ்கரன் தலைமையில் உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டது.

• 19-01-2005 அன்று மட்டு, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 12 முகாம்களில் ஒரு முகாமுக்கு சுமார் 5பிரதிநிதிகளை கொண்ட 60க்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட குழுவொன்று இரா.துரைரட்ணம் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எப்ப இன் சிரேஷ்ட உறுப்பினர்களான இராமச்சந்திரன், பாஸ்கரன், பத்மநாதன் போன்றவர்கள் தற்பேது முகாம்களில் நிலவும் நெருக்கடி பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்ற நோக்கத்துடன் பிரதேச சபை செயலாளர் உதவி பிரதேச செயலாளர் போன்றவர்களுடன் சேர்ந்து கலந்துரையாடலில் முகாம்களில் உள்ள மக்களின் குறைகளை கண்டறிந்து சில விடயங்களுக்கு பரிகாரம் கண்டு அவர்களுக்கான கடற்கரை பிரதேசத்தில் வாழ்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் திராய்மடு பகுதியில் சகல வசதிகளையும் உள்ளடக்கிய அமைக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கான சாத்தியம் பற்றியும், தற்சமயம் பாடசாலைகளில் தங்கியுள்ள அனைவரும் மீனவர்களின் நலன் கருதி வேறு முகாம்களுக்கு செல்வதற்கு ஒத்துழைக்குமாறும் பாதிக்கப்படாத வீடுகளுக்கு சென்று மீள் குடியேறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் முகாம்களில் உள்ள குறைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



• 20-01-2005 அன்று மட்டு நகர் புறத்தை அண்டிய கரை

தொடர்ச்சி 5ம் பக்கம்

# ஈ.பி.ஆர்.எல்......



யோர வீச்சுத் தொழிலாளர் குடும்பங்கள் சுமார் 50 குடும்பத்தினருக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்-ப பிராந்திய அலுவலகத்தில் வைத்து இராமச்சந்திரன், பாஸ்கரன், பத்மநாதன் தலைமையில் உலர் உணவு வழங்கப்பட்டது. மேற்கூறப்பட்ட தொழிலாளர்கள் சுமார் 25, 30 வருடங்களாக ஆற்றில் நடந்து சென்று வீச்சுத் தொழில் ஈடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

• 21-01-2005 அன்று காலை மட்டக்களப்பு அலுவத்தில் திருச்செந்தூர்,(கல்லடி) கிராமத்தைச் சேர்ந்த முற்றாக பாதிக்கப்பட்ட உயிரிழப்பு, வீடு சேதம், தொழில் பாதிப்பு, மீன்பிடித் தொழில் ஈடுபடுகின்ற குடும்பங்களுக்கு (சுமார் 150 குடும்பங்களுக்கு) தலா 2000 ரூபா வீதமும் பாடசாலை மாணவர்களின் கல்வியை தொடங்குவதற்கு இரா. துரைரட்ணம் தலைமையில் நிதியுதவி வழங்கப்பட்டது. 3000 மீற்றர்



அப்பால் உள்ள மீன்படித் தொழிலாளர்களுக்கு அடுத்தக்கட்டமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரச நிர்வாகத்தின் ஊடாக உதவிகள் பெற்று தர நடவடிக்கை எடுப்பதோடு எதிர்வரும் காலங்களில் இயன்றளவிலான உதவிகளை செய்வதற்கு ஈ.பி.ஆர்.எல்.எப்-ப தயராக இருப்பதாகவும் வெளிநாட்டிலிருந்து இந்த நிதி உதவி வழங்கிய உறுப்பினர்களுக்கு ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் முடிவுற்றது.

• 23-01-2005 ஈ.பி.ஆர்.எல்.எப் பாஸ்கரன், இராமச்சந்திரன், தலைமையிலான குழு பெரிய கல்லாறு கிராமத்திற்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை கேட்டறிந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பொது இடங்களை பார்வையிட்டு 40 குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கியது. இக் கிராமத்தில் சிரமதானப்பணியில் ஈடுபட்டக் கொண்டிருக்கும் ஜே.வி.பி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தங்களது ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கினர்.

கடந்த சில தினங்களாக சிரமதானப்பணியில் ஈடுபட்டுள்ள ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு அக் கிராம மக்கள் குளிர் பானங்கள் வழங்கி தங்களுடைய முழு ஆதரவுகளையும் தெரிவித்தனர். அக்கிராம மக்களும் ஜே.வி.பி உறுப்பினர்களும் ஒன்று

04ம் பக்கத் தொடர்ச்சி

சேர்ந்து சிரமதானப்பணியில் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. பாடசாலை, வளங்கள், பொது இடங்கள், தனியார் வீடுகள், பாதைகள் திருத்தல், போன்றவற்றை துப்பரவு செய்து மக்களின் பாவனைக்காக ஒழுங்கு செய்யப்பட்டுக் கொடுக்கப்பட்டு.

• 23-01-2005 தோழர் இரா. துரைரட்ணம் அவர்கள் மட்டக்களப்பில் கலாச்சார, காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் திருவிமல் ரத்னாயக்கா பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர், சுபசிங்க, இவர்களைக் கொண்ட குழுவினரை சந்தித்து மட்டக்களப்பு மாவட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்வி, மீனபிடி, சுகாதாரம், காணி, விவசாயம், மீன்பிடி போன்றவை சம்பந்தமாக பாதிப்புக்களை விளக்கிக்கூறி உரிய நடவடிக்கைகளுக்கான திட்டங்களை ஆலோசனைகளை முன்வைத்து அதிகாரிகள் தங்கள் கைவசம் திட்டங்களை தயாரித்து வழங்கியதுடன் அத்திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் 2000 ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு மேல் கிராமம் கிராமமாக சிரமதானப் பணியில் ஈடுபட்டமைக்கு மக்களின் சார்பாக நன்றி கூறப்பட்டது.

• 25-01-2005 அன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்லடி, திருச்செந்தூர் வேளாங்கண்ணிபுரம் கிராமத்ததைச் சார்ந்த மிகவும் பாதிக்கப்பட்ட முழு நேர மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களுக்கும், ஆழ்கடல் மீன்பிடி மேற்கொள்ளும் வேளாங்கண்ணிபுரம், கல்லடி, அகிய பாதிக்கப்பட்ட கிராமத்தில் அப்பிரதேச மாணவர்களின் கல்வியை தொடர்வதற்காக 40 குடும்பங்களுக்கு தலா 2000 ரூபா வீதம் நிதியுதவி ஈ.பி.ஆர்.எல்.எப் இரா.துரைரட்ணம் தலைமையில் ராமச்சந்திரன், பாஸ்கரன், பெர்னான்டோ நிதியுதவி வழங்கினர்.

அம்மீனவர்களின் எதிர் கால மீன்பிடித் தொழில் அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் 4 கட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மீனவர் வீட்டுத்திட்டம், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வலை, தோணி, மீன்பிடி தொமில் செய்யும் மீனவர்களுக்கு கடற்கரையை அண்டிய பகுதிகளிலேயே குடியேற்றத் திட்டங்களை அமைத்து தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது விடயமாக உரிய அதிகாரிகளதும், அமைச்சர்களதும் கவனத்திற்கு எடுத்துச் செல்வதாக திரு இரா. துரைரட்ணம் தெரிவித்தார். மேலும் இவர்கள் அனைவரும் இந்துக் கல்லூரி, சென் மைக்கல் பாடசாலை, நெற்களஞ்சியசாலை போன்ற முகாம்களில் இருப்பவர்கள்.

• 25-01-2005 காலை சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்லடி இராணுவ முகாமிற்கு அண்மித்த கிராமமான வேளாங்கண்ணிபுரம் கடற்கரையில் இருந்து 250 மீற்றருக்கு அப்பால் சுமார் 100 பேரைக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.



எப்-ப உறுப்பினர்கள் வீடுகள், பாதிப்படைந்த வீதிகள், கடற்கரை வீதி போன்றவற்றில் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். இப்பகுதியை துரிதமாக துப்பரவு செய்து மக்கள் இருக்கக்கூடிய வகையில் ஒழுங்குகளை மெற்கொள்ள திட்டமிட்டு வேலைகள் நடைபெற்றன.

• 25-01-2005 கடந்த 29-12-2004 சுனாமி இயற்கை அனத்தத்தால் உயிர்நீத்தவர்களுக்கு கிரியைகள் செய்வதாகவும் சுகயீனமடைந்தவர்கள் குணமடைய பிரார்த்தனை செய்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில முகாம்களில் உள்ளவர்களுக்கு நிதியுதவியை ஈ.பி.ஆர்.எல்.எப் வழங்கி இந்த 31ம் நினைவு நாளன்ற இக் கடமைகளை பூர்த்தி செய்வதற்கு சுமார் 10,000 ரூபா வீதமும் பொருட்களும் வழங்கப்பட்டு பிரார்த்தனை நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல்.எப்-ப இன் சிரேஷ்ட தலைவர்கள் பங்குபற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

• 27-01-2005 அன்று 26-12-2004 அன்று இடம் பெற்ற சுனாமி இயற்கை அனர்த்ததினால் திருச்செந்தூர் அன்னை வேளாங்கண்ணி புரத்தில் அகால மரணமடைந்த எமது உடன்பிறப்புக்களுக்கு எமது தாய் தந்தையர் சகோதர சகோதரிகள் சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் திருச்செந்தூர் அன்னை வேளாங்கண்ணிபுரம் மக்களின் கண்ணீர் அஞ்சலிகள். இன்று சுமார் 800 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இக் கண்ணீர் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த அஞ்சலிக்கட்டம் இந்துக்கல்லூரி முகாமில் உள்ள பிள்ளையார் தேவாலயத்தில் திரு தங்கராஜா தலைமையில் காலை 11.00 மணிக்கு த.சரவணபவானந்த சர்மா குருக்களின் பூசையுடன் ஆரம்பமாகியது. இந் நிகழ்வில் இறந்தவர்களின் ஆத்மசாந்திக்காக தீபம் ஏற்றப்பட்டு அர்ச்சனை செய்யப்பட்டு மதிய போசனம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஈ.பி.ஆர்.எல்.எப்-ப முக்கியஸ்தர் இராமச்சந்திரன், பாஸ்கரன், பெர்னாண்டோ போன்ற முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.


• காயமடைந்தவர்கள் குணமடைய பிரார்த்தனை செய்த தோடு மாலை 3.30 மணிவரை மதிய போசனம் வழங்கப்பட்டது. இறுதி நேரத்தில் 150 சாப்பாட்டு பார்சல்கள் வழங்கப்பட்டன. மதிய போசனததிற்காக 18,000ரூபா ஈ.பி.ஆர்.எல்.எப்-ப இரா. துரைரட்ணம் அவர்களால் வழங்கப்பட்டது.

• மட்டக்களப்பு மைக்கல் முகாமில் காலை 11.00 மணிக்கு திரு இராமச்சந்திரன், பாஸ்கரன், பொன்னாண்டோ பிரதேச தலைவர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்விற்கு பங்குத்தந்தை அருள் திரு ஜோசப் மேரி அவர்கள் தலைமையில் மட்டக்களப்பு மைக்கல் கல்லூரியில் உள்ள புனித தேவாலயத்தில் இறை வணக்கம் செலுத்தப்பட்டு பிரார்த்தனை செய்யப்பட்டு தீபம் ஏற்றி இந்து முறைப்படி இறைவணக்கம் செய்யப்பட்டது. அதன் பின்பு மதிய போசனம் ஆரம்பித்து வைக்கப்பட்டு நிகழ்ச்சி முடிவுற்றது.

• அங்கு பங்கு தந்தை ஆற்றிய உரையில் இரவு நேரம் சுனாமி நடந்திருந்தால் பல லட்சக்கணக்கான உயிர்கள் அழிந்திருக்கும் எனவும் இந்த பாரிய அழிவை கடவுளே தடுத்து நிறுத்தியிருக்கிறார் எனவும் இந்த பிரர்த்னையை ஒழுங்கு செய்த ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியினருக்கு அவர் நன்றியை தெரிவித்துக் கொண்டதோடு மூவின மக்களும் பேதமின்றி உதவி செய்து வருகின்றமைக்கு தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

• இந்த நிகழ்விற்கு ஈ.பி.ஆர். எல்.எப் சிரேஷ் தலைவர் திரு இரா. துரைரட்ணம் 11.500 ரூபா ரொக்கப்பணமும் உணவுப் பொருட்களும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இம் முகாமில் 300 குடும்பங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தோழர் றொபர்ட் சுபத்திரன் அவர்களின் பிறந்தநாள் பிரசுரம்



தோழர் றொபர்ட் சுபத்திரன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் உருண்டோடி விட்டன அவர் கால் நூற்றாண்டு காலம் தமிழ் சமூகத்தின் விடிவிற்காகவும் இலங்கையில் இனங்களிடையே நல்லுறவை கட்டியெழுப்புவதற்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும் உலகளாவிய அளவில் இனவெறி நிறவெறி வன்முறை இவற்றிற்கு எதிராகவும் மானிட மேன்மையை நிலை நிறுத்துவதற்காகவும் தனது இடையறா உழைப்பை நல்கியவர் தோழர் றொபர்ட்.

1970களின் நடுப்பகுதியில் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட தோழர் றொபர்ட் 1980 இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து கொண்டார். ஈழ மாணவர் பொது மன்றம் என்ற வெகுஜன அமைப்பினூடாக யாழ் குடா நாட்டின் பல பகுதிகளிலும் திருமலை மட்டு ஆகிய பகுதிகளிலும் சமூகத்தினுள் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் சிறந்த பங்களிப்பை வழங்கியவர்.

மாணவர்கள் இளைஞர்களை அணிதிரட்டுவதுடன் அவர் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. கிராமிய உழைப்பாளர்கள் வறிய விவசாயிகள் சாதி ஒடுக்குமுறையை எதிர் கொண்ட மக்கள் பெண்கள் என பல்வேறு தளங்களிலும் அவர் வேலை செய்தார். சிறு சிறு தொழிலகங்களில் கூட உழைப்பாளர்களை ஒன்றிணைக்கும் வேலையில் ஈடுபட்டார். அவர் பன்முக ஆளுமையை கொண்டிருந்தார்.

1980 இல் நடைபெற்ற சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குமாக நடைபெற்ற நீண்ட பாதயாத்திரையில் பொலிசார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியபோது பலருக்கு அவர் முதலுதவி சிகிச்சை அளித்தது இன்றும் பல நெஞ்சங்களில் நிழலாடுகிறது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படை அமைப்பு கட்டியெழுப்பப்பட்டபோது அதன் ஆரம்ப கர்த்தாவாக அதனை வழிநடத்துபவராக அவர் செயற்பட்டார். தோழர் பத்மநாபா தோழர் றொபர்ட்டிற்கும் மக்கள் விடுதலைப் படையின் ஏனைய சில மூத்த அங்கத்தவர்களுக்கும் மக்களுடன் கலந்திருந்து கொண்டு அவர்களின் இன்ப துன்பங்களில் பங்குபற்றிக் கொண்டு எவ்வாறு போராடுவது என்பதை நடைமுறை சார்ந்த செயற்பாடுகள் மூலம் தெளிவுபடுத்தியிருந்தார்.

சமூகத்தினுள்ளும் கட்சியினுள்ளும் சிறந்த அனுபவங்களை அவர் பெற்றிருந்தார். மார்க்சிய இலக்கியங்கள் யதார்த்தவாத நாவல்கள் கவிதைகள் சினிமா மற்றும் படைப்புக்களில் அவர் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார். பிற்காலகட்டத்தில் அவர் பின்நவீனத்துவ கருத்துக்களிலும் ஈடுபாடுகொண்டிருந்தார்.

எமது சமூகத்தினுள் புழக்கத்தில் உள்ள வாய்மொழி சொற்கள் பழமொழிகள் போன்றவற்றில் அவர் களஞ்சியமாகவே காணப்பட்டார். சமயங்களில் விடயங்களை விளங்க வைப்பதில் மிக ஆற்றல் படைத்தவராக காணப்பட்டார். தனது நடைமுறைகளின் மூலம் தனது கட்சியின் தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் நண்பர்களுக்கும் அவர் சிறந்த வழிகாட்டியாக காணப்பட்டார். நகைச்சுவை உணர்வு கொண்டவர் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் இன்முகத்துடன் பழகுவதும் மற்றவருக்கு துன்பத்தில் உதவுவதும் அவரின் அருங்குணங்கள். இவற்றை அவர் ஆரவாரம் செய்வதில்லை.

1990இல் சோவியத்யூனியன் கிழக்கு ஐரோப்பாவின் வீழ்ச்சியின் பின்னர் மார்க்சின் அரசியல் பொருளாதாரம் பற்றிய தேடல்களில் ஈடுபட்டார். அந்த அரசியல் பொருளாதாரமே அவரின் தீவிர ஆர்வத்துக்குரிய சமூக பொருளாதார விடயமாக இருந்தது.

அவர் எத்தகைய இடர் நேரினும் கலங்காத மனிதனாக நிதானமாக காரியமாற்றுபவராக காணப்பட்டார். அவரது வரலாற்றில் பெரும்பகுதி சோகமானதாகவும் துன்பம் நிறைந்ததாகவும் விடா உறுதியுடன் செயற்படுவதற்கான மனவுறுதியை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. அவர் வாழ்க்கையின் இருண்ட பக்கங்களில்தான் வாழ்ந்து கொண்டிருந்தார், போராடிக்கொண்டிருந்தார். சித்திரவதை முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் அகதி முகாம்களிலும் துன்பத்தில் உழலும் மக்கள் மத்தியிலும் வாழ்ந்து கொண்டும் போராடிக்கொண்டும் இருந்தார். மகிழ்ச்சியானதோ மினுமினுப்பானதோ போன்ற பக்கங்கள் அவரது போராட்ட வாழ்க்கையில் இருக்கவில்லை. வசதியாக வாழ்வதற்கு அவருக்கு எத்தனையோ வாய்ப்புக்கள் இருந்தன அவர் நினைத்திருந்தால் எப்படியோ வாழ்ந்திருக்கலாம்.

ஆனால் அவர் துன்பத்திலும் அடக்குமுறையினுள்ளும் உழலும் சமூகத்திற்காக வாழ்ந்தார். அதன் நம்பிக்கையை பெறுவதற்கு அவர் இடையறாது உழைத்தார். சமூகத்தின் மீதான தனது அன்பை இதயத்தில் தேக்கி வைத்திருந்தார். எத்தகைய மூடத்தனமும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத விடயங்களும் அவரை அண்ட முடியாது. சமூகத்தில் சாதாரண மனிதர்கள் கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் படைப்பாளிகள் அரசியல் கட்சி அங்கத்தவர்கள் தலைவர்கள் என பல திறத்தாரோடும் உறவை பேணினார். ஒரு இனிமையான நற்பண்புகள் நிறைந்த ஆளுமைமிக்க மனிதர் என்ற பெயர் அவருக்கு இருந்தது.

1985 முற்பகுதி தொடக்கம் 1987 நடுப்பகுதி வரை அவர் ஸ்ரீலங்கா அரசின் சித்திரவதை முகாம்களிலும் சிறையிலும் காலம் கழித்தார். சிறையில் பல்வேறு இயக்கங்கள் அரசியல் கட்சிகளை சேர்ந்த அங்கத்தவர்கள் மத்தியில் பேரபிமானம் பெற்றவராக றொபர்ட் தோழர் திகழ்ந்தார். அப்போது அவருக்கு ரஞ்சன் என்ற ஒரு பெயரும் இருந்தது. சிறையில் நடைபெற்ற உண்ணாவிரத மற்றும் சத்தியாக்கிரக போராட்டங்களில் அவர் முழுமையான ஈடுபாட்டுடன் பங்களித்தார். பல்வேறு இயக்கங்களின் போராளிகளுக்கும் அவர் ஒரு நண்பனாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இன்று உலகம் முழுவதும் பரந்துவாழும் பலநெஞ்சங்களுக்கு ஆதர்சமாக திகழ்ந்தார். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு அவர் சமகாலத்தின் தலை சிறந்த உதாரண மனிதனாக திகழ்ந்தார்.

ஒரு தோழர் குறிப்பிட்டது போல் இயக்கத்திற்கு எந்த உடையுடன் வந்தாரோ அதனோடுதான் அவர் மரணித்தார் என்பதுதான் உண்மை. சிறையில் இருந்து திரும்பியவர்கள் வீடு செல்வதற்கான ஏற்பாடுகளில் அவர் சிறையில் இருந்து மீண்ட பின்னரும் அவர் பல மாதங்கள் உழைத்தார். விடுதலை செய்யப்படாதவர்களை சிறையில் சென்று சந்தித்து அவர்களுக்கு உற்சாகமூட்டினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மிகப் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய 80 களின் முற்பகுதியில் இருந்து நடுப்பகுதிவரை பொருளாதார சுமையை குறைப்பதற்கு அவர் வழங்கிய பங்களிப்பு முக்கியமானது.

இந்தியாவிலும் அவர் பல இலக்கிய அரசியல் முற்போக்கு சக்திகளுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டார். எப்போதும் இலகுவான வேலைகளை எடுத்துச் செய்வதிலும் வாய்ச் சவாடலில் ஈடுபட்டிருந்தவர்கள் மத்தியில் அவர் கடினமான பணிகளை மேற்கொண்டிருந்தார். அகதி முகாம்களில் வாழ்ந்த தோழர்களை சென்று சந்திப்பதில் அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதில் அவர் அர்ப்பணத்துடன் செயற்பட்டார். நம்பியவர்களை நட்டாற்றில் விடக்கூடாது, சொன்ன சொல்லை காப்பாற்ற வேண்டும் என்பவற்றில் எல்லாம் அவர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

மக்கள் மத்தியில் வேலை செய்வது நெருக்கடியான போர்க்களங்களை எதிர்கொள்வது அகதி முகாம்களில் வாழ்பவர்களின் நலன்களை கவனிப்பது மக்களுக்கு உருப்படியாக எதையாவது செய்ய வேண்டும் என்ற அவரின் குணாதிசயங்களாக இருந்தன.

1995இற்குப் பின்னர் யாழில் வேலை செய்ய கிடைத்த சந்தர்ப்பத்தில் சமூகத்தில் நட்பையும் உறவையும் வளர்த்தார். அவர் யாழ் மாநகரசபை அங்கத்தவராக செயற்பட்ட போது ஆற்றிய உரைகள் சிந்தனையை தூண்டுபவை. புகழ்மிக்கவை. சகல கட்சிகளை சார்ந்த அங்கத்தவர்களும் யாழ் ஊடகவியலாளர்களும் அவர் மீது பெருவாஞ்சை கொண்டிருந்தனர். நிமிர்ந்த உறுதியான வசீகரமான தோற்றம் கொண்ட மனிதராக எங்கள் றொபர்ட் தோழர் காணப்பட்டார்.

யாழ்மாநகர சபையில் ஒரு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்றவகையில் அவரின் பங்களிப்பு மகத்தானது. ஒரு உள்ளூராட்சிசபை அங்கத்தவர் பொறுப்பை கூட அவர் மிக நேர்த்தியாக கையாண்டார். சகல கட்சிகளின் அங்கத்தவர்கள் உறுப்பினர்களுடன் நல்லுறவைப் பேணினார். கட்சிகளுக்கப்பால் அவர்களும் தோழர் றொபேர்ட்டின் மீது பேரன்பு, மதிப்பும் கொண்டிருந்தார்கள். ஏனைய உள்ளூராட்சிசபைகளில் அங்கத்துவம் வகித்த கட்சியின் அங்கத்தவர்களுக்கு உறுப்பினர்களுக்கு எவ்வாறு மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பது கையாள்வது என்பது பற்றிய சிறந்த வழிகாட்டுதலைச் செய்தார்.

யாழ் நூலகத்தை திறப்பதற்காக அவர் அயரா முயற்சியை மேற்கொண்டிருந்தார். தெற்கில் இருந்து வடக்கிற்கு விஜயம் செய்த ஊடகவியலாளர்கள் உள்ளூர் அரசியல் தலைவர்கள் சாதாரணமக்கள் மனித உரிமையாளர்களுடன் உறவை வளர்த்தார்.

அதிகார பகிர்விற்காகவும் ஜனநாயகத்திற்காகவும், மனித உரிமைகளுக்காகவும், அவர் இடையறாது போராடினார். அவரை படுகொலை செய்த புலிகள் இயக்கத்திற்கு எந்த நன்நோக்கும் இருக்க முடியாது. அவர்கள் இன்றுவரை தோழர் றொபர்ட்டின் படுகொலையை உரிமை கோர முடியாத கோழைகளாகத்தான் இருக்கிறார்கள்.

தோழர் றொபேர்ட் தனது வாழ்வாலும் மரணத்தாலும் தமிழ் பாசிஸ்ட்டுக்களை வெட்கி தலைகுனிய வைத்தள்ளார். தமிழ் பாசிஸ்டுக்கள் எவ்வளவு கேவலமானவர்கள் என்பதை எவ் வளவு நயவஞ்சகமானவர்கள் என்பதை பாடசாலை வகுப்பறையில் மறைந்திருந்து படுகொலையை அரங்கேற்றிய தன் மூலம் நிரூபித்துள்ளார்கள். தோழர் றொபர்ட் தனது மரணத்தின் மூலமும் தமிழ் பாசிஸ்டுக்களை அம்பலப் படுத்திச் சென்றுள்ளார்.

அன்னாரின் வாழ்வையும் மரணத்தையும் வரலாறு உரிய முறையில் பதிவு செய்யும். அப்போது பாசிஸ்டுக்கள் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் இருப்பார்கள்.

தோழர் றொபர்ட்டிற்கும் ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் மரணித்த போராட்டக்காரர்களுக்கும் மக்களுக்கும் எம் இதய அஞ்சலிகள்.

# மக்களின் அன்றாட வாழ்வில் தலையீடு

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் புலிகளின் வரிவிதிப்புக்கள் ஜனநாயக விரோதப் போக்குகள், சிறுவர் ஆட்சேர்ப்பு போன்றவற்றால் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பொதுவாக இவைபற்றிய கண்டனங்களும், விமர்சனங்களுமே அவ்வப்போது மேலெழுகின்றன. ஆனால், இவற்றை விடவும் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் புலிகளின் தலையீடுகள் பல பொது கவனிப்பை பெறத் தவறிவிடுகின்றன.

தனிமனிதர்கள் ஒவ்வொருவரதும் நடவடிக்கைகளில் புலிகளின் தலையீடு இல்லாத விவகாரங்கள் மிகக்குறைவு. கல்வி, தொழில், அரசியல், சமயம், கலை, கலாச்சாரம், பொருளாதாரம், அசையும், அசையா சொத்துக்கள் எல்லாவற்றிலும் புலிகளின் தலையீடு உண்டு.

யுத்த காலத்தை விடவும் யுத்தநிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இந்த தலையீடுகள் மிக மிக அதிகம். அரசியல் நடவடிக்கைகள் என்ற பேரில் புலிகள் தமிழ் குடிமக்களின் அனைத்து விவகாரங்களிலும் தலையீடு செய்கின்றனர்.

அரசாங்கமும், கண்காணிப்புக் குழுவினரும் சமாதான முயற்சிகள் தோற்றுப்போகவில்லை என்று நிறுவுவதில் இருக்கின்ற அக்கறையில் நூறில் ஒரு பங்கைத்தானும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வந்த புலிகளால் தமிழ் மக்கள் நாளாந்தம் அனுபவிக்க நேர்கின்ற கஷ்டங்கள், துன்பங்கள், மன உளைச்சல்கள் குறித்து அக்கறை காட்டுவதில்லை.

படுகொலைகளையே கண்டுகொள்ளாத கண்காணிப்புக் குழுவினர் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பார்களா என்ற விரக்தி தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

யுத்தநிறுத்தத்தின் மூலம் அனுபவிக்கக் கூடிய பாதுகாப்பு உணர்வு மக்களிடம் இல்லை. அவர்கள் யுத்த காலத்தில் விமானத் தாக்குதலுக்கும், பழிவாங்கும் தாக்குதல்களுக்கும், பொருளாதாரத் தடைகள் மற்றும் இதர கட்டுப்பாடுகளுக்கும் முகம் கொடுத்ததைப்போலவே புலிகளின் கொண்டாட்டங்கள், ஹர்த்தால்கள், மறியல்கள், ஊர்வலங்கள் என ஒருபுறமும் கலாச்சாரத்தின் பேராலும், கல்வி மேம்பாடு என்ற பேராலும், நிர்வாகம் என்ற பேராலும், மெத்தத்தில் ஏகபிரதிநிதித்துவத்தின் பேராலும் இப்போது நிவாரணப் பணிகளின் பேராலும் புலிகளின் தலையீடுகள், வற்புறுத்தல்கள், பலாத்காரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது.

இது தமிழ் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்குவதுடன் அவர்களது இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாகவும் உள்ளது. கேள்விக்கிடமின்றி புலிகளின் உத்தரவுகளுக்குப் பணிந்து போவதைத் தவிர வேறு வழியின்றி மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். உளவியல் தாக்கம் சுனாமி பேரலையினால் ஏற்பட்ட அழிவுகளால் மட்டும் ஏற்படவில்லை. யுத்தத்தினாலும், புலிகள் கையிலெடுத்திருக்கும் வரம்பற்ற அதிகாரத்தினாலும் ஏற்பட்டுவரும் உளவியல் தாக்கம் அதனிலும் அதிகம். புலிகளால் தண்டிக்கப்பட்டவர்கள் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவங்களும் உண்டு.

யுத்தத்தினாலும், இடம்பெயர்வுகளாலும் சேதமடைந்த தமது இருப்பிடங்களை புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பொதுமக்களுக்கு எமது பிரதேசத்தில் உள்ள மண் வளமும், மரங்களும் பயன்பட வேண்டும். ஆனால், சூழலைப் பேணுவது என்ற பேரில் புலிகளின் தலையீடும், கட்டுப்பாடுகளும் ஒருகடகம் மண் 53 ரூபா வரை விலை கொடுத்து பெறவேண்டியுள்ளது. இந்தப் பணம் மண் அகழ்வதால் ஏற்படும் சூழல் பாதிப்பை நிவர்த்தி செய்யப் பயன்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. அவ்வாறான எந்த திட்டமும் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டதாக எந்த முன்னுதாரணமும் இல்லை.

ஊழலும், மோசடியும், பெருகியது தான் மிச்சம். வீட்டு தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் மரத்தை பெறுவதிலும் பாவனையாளர்கள் இவ்வாறு தேவையற்ற பல கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றுக்காக நேரடியாகவோ, மறைமுகமாகவோ புலிகளின் அனுமதியை பெறவேண்டிய கட்டாயம், எழுதப்படாத சட்டம் நடைமுறையில் உள்ளது.

இயற்கை பாதுகாப்பு என்றும் கலாச்சாரத்தை பேணுவது என்றும் புலிகளின் எல்லா திட்டங்களும், நடவடிக்கைகளும் அவர்களின் வருவாய்ப் பெருக்கத்திற்கும், கண்காணிப்பிற்கும், சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும் புலனாய்வு நடவடிக்கைகளுக்கும் பயன்படுகின்ற அளவிற்கு மக்களுக்கு பயன்விளைவிப்பனவாய் இல்லை.

வர்த்தகர் சங்கங்கள், முச்சக்கர வண்டி சங்கங்கள், தனியார் சிற்றூர்தி சங்கங்கள், சிகை அலங்கரிப்பாளர் சங்கங்கள், வெண்மை வாணிப சங்கங்கள், மீனவர் சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள் என எல்லாமே புலிகளின் மாவீரர் தின கொண்டாட்டம், பிறந்தநாள் கொண்டாட்டம், பொங்குதமிழ் ஆரவாரம் என்பவற்றுக்காகவும், புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும், இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்க வேண்டும் என அறிக்கை விடுவதற்கும் புலிகளின் கோரிக்கைகளை துண்டுப்பிரசுரங்களாகவும், அறிக்கைகளாகவும் வெளியிடும் ரப்பர் ஸ்ராம்புகளாகவும் செயற்பட முடியுமே தவிர தாம் சார்ந்த தொழிலாளர்களின் நன்மைக்காக, சங்கத்தின், சங்க அங்கத்தவர்களின் விமோசனத்திற்காக ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளக் கூடிய நிலையில் இந்தச் சங்கங்கள் விட்டுவைக்கப்படவில்லை. எல்லாமே புலிகளால் நலமடிக்கப்பட்டவை. புலிகளின் தேவைகளைப் பொறுத்தே அவை செயற்படமுடியும்.

புலிகளின் தேவைகளுக்காக ஆட்டோக்களையும், சிற்றூர்திகளையும் ஒழுங்கு முறைவைத்து அனுப்பிவைக்க வேண்டியது அந்தந்த சங்கங்களின் கடமை, ஹர்த்தால் அறிவிக்கப்பட்டால் கடைகளைப்பூட்ட வேண்டும், கடை வாசலில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விட வேண்டும், மாவீரர் தின வாரத்தில் மஞ்சள், சிவப்பு நிறக்கொடிகளால் அலங்கரிக்க வேண்டும். அதற்கான செலவை அந்த வீதியில் உள்ள கடைக்காரர்களே பார்த்துக்கொள்ள வேண்டும்.

புலிகளின் நிகழ்வுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அந்த நிகழ்வுகளுக்கு சங்க அங்கத்தவர்கள் அழைத்துக்கொண்டு செல்ல வேண்டியதும் வராதவர்களின் பெயர் விபரங்களை புலிகளிடம் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பும் தலைர் செயலாளர்களுடையது. இது சங்க அமைப்பு விதியில் வராத சட்டம்.

இது தவிர புலிகள் எழுதிக்கொடுக்கும் அறிக்கைகளை தமது சங்கப் பெயரில் வெளியிடுவதுடன், தமது செலவில் துண்டுப்பிரசுரங்களாகவும் அச்சடித்து வெளியிட வேண்டும். இங்கே சங்கத்திற்கோ, அங்கத்தவரான தனி மனிதனுக்கோ எந்த உரிமையும் இல்லை, எந்தப் பெறுமதியும் இல்லை. இவற்றையெல்லாம் முகம் சுளிக்காமல் செய்கின்ற தலைவர் செயலாளர்களே அடுத்த வருடத்திலும் தலைவராகவும், செயலாளராகவும் வரமுடியும். குடாநாட்டில் உள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகம் கூட இன்று இந்த நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

கலாச்சாரம் பேணுவதாகவோ, சூழல் பாதுகாப்பு என்ற பேராலோ அல்லது வேறெதும் நிர்வாகத்தின் பேரை குறிப்பிட்டுச் சொல்லியோ பொதுமக்கள் மத்தியில் தோன்றும் எந்தப் பிரச்சினைகளுக்காகவும் எந்த நேரத்திலும் புலிகள் தலையிடுவதும், கைதுசெய்வதும், தடுத்து வைப்பதும், தண்டிப்பதும் எழுதப்படாத சட்டமாக வடக்கு கிழக்கில் நிலவிவருகிறது.

புலிகளின் இந்த ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை புலிகளுடன் ஜனநாயக ரீதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முற்பட்டிருக்கும் அரசாங்கமோ, இந்த சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாக இருக்கும் நோர்வே தரப்போ, கண்காணிப்புக் குழுவோ கண்டுகொள்வதில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வந்த புலிகள் சட்டம் ஒழுங்கு உட்பட அனைத்து நிர்வாகங்களிலும் தலையிடுகின்றனர். அதேவேளை இலங்கை அரசின் பொலிஸாரும், நீதிமன்றங்களும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது சட்டத்தின் முன் புலிகளைத் தவிர அனைவரும் சமம் என்ற அர்த்தத்திலேயே நடைமுறையில் உள்ளது.

தமிழ் மக்கள் இலங்கை அரசுக்கு வரியும், புலிகளுக்கு வரி என்ற பேரில் கப்பமும் செலுத்துவது போலவே இரண்டு விதமான சட்டம் ஒழுங்கை பின்பற்ற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். ஒரே நேரத்தில் அவர்கள் அரசின் நிர்வாகத்திற்கும், புலிகளின் நிர்வாகத்திற்கும் இடையே அல்லாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலாவது புலிகள் எந்த நேரத்திலும் யாரையும் கைது செய்வது, விசாரிப்பது, தண்டிப்பது என்ற நடைமுறையை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சமாதான முன்னெடுப்புக்களுக்கு அனுசரணையாளர்களான நோர்வே தரப்பும், கண்காணிப்புக் குழுவும் கூட அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ள புலிகளின் இந்த நடவடிக்கைகளை கண்டும் காணாமல் இருக்க முடியாது.

இந்த நெருக்கடிகளிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக இத்தகைய அதிகாரங்களை புலிகளுக்கு வழங்க அரசாங்கமும், அனுசரணையாளர்களும் உத்தேசித்திருந்தால் அதுபற்றிய வரையறைகள் மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் இல்லையேல் வடக்கு கிழக்கில் நிலவும் உத்தியோக பூர்வமற்ற சட்டம் ஒழுங்கு, நிர்வாகம் என்பவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்று சொல்லப்படுகின்ற பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு அரசின் நிர்வாகமும், புலிகளின் நிர்வாகமும் அழைப்பாணை அனுப்புவதும், விசாரிப்பதும், தண்டிப்பதும் இந்த நாட்டின் அரசியல் அமைப்பின் பிரகாரம் இந்த நாட்டின் பிரஜைகள் தமது உரிமைகளை அனுபவிக்க முடியாமல் செய்துவிடுகிறது. இது நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது. அரசியல் அமைப்பின் பிரகாரம் இந்த மக்களின் உரிமைகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ●

# இயக்கத்தின் அடிப்படை அரசியல் இலக்குகள்

# ஈ.பி.ஆர்.எல்.எவ் – பத்மநாபா

1.தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிராந்தியத்தில் அனைத்து அரசியல் பொருளாதார கலாச்சார அம்சங்களிலும் தமிழர்களுக்குரிய ஜனநாயக உரிமைகளை தமிழர்கள் அனைவரும் முழுமையாக பிரயோகிக்கும் அனுபவிக்கும் வகையாகவும் அத்துடன் இங்கு வாழும் அனைத்து சமூகங்களினதும் அரசியல் பொருளாதார கலாச்சார ஜனநாயக உரிமைகள் மதிக்கப்படவும் அங்கீகரிக்கப்படவும் வகையான நிலைமைகளை உருவாக்குதல்.

2. இலங்கை எங்கும் பெரும்பான்மைத் தேசிய இனமான சிங்கள மக்களுக்கு உரிய உரிமைகள் மற்றும் வாய்ப்புக்கள் சமநீதியின் அடிப்படையில் தமிழர்கள் முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் ஆகிய அனைத்து தேசிய இனங்களுக்கும் உரித்தாக்கப்படல்.

3. தமிழர்களை பெரும்பான்மையாக கொண்ட பிராந்தியத்தில் நியாயமானதும் நீதியானதுமான அளவுக்கு விரிவான அதிகாரப்பகிர்வு கொண்ட ஒரு சுயாட்சி அமைப்பை உருவாக்குதல்.

4. வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களுக்கும் மலையகத்திலுள்ள தமிழ் மக்களுக்கும் விசேடமான அதிகாரப் பகிர்வு அலகுகள் உருவாக்கப்படல். அத்துடன் வடக்கு கிழக்கில் உள்ள சிங்கள மக்களுக்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழர் முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களுக்கும் அவர்களின் உயிர் உடைமைகளுக்கான பாதுகாப்பு சமூக பொருளாதார கலாச்சார வாழ்வுக்கான பாதுகாப்பு மற்றும் மொழியுரிமை பிரயோகம் ஆகியவை தொடர்பான விசேட ஏற்பாடுகள் எல்லா மாநிலங்களிலும் மேற்கொள்ளப்படுதல்

5. இலங்கையின் அரசியல் அமைப்பை சிறந்ததொரு கூட்டாட்சி (சமஷ்டி) கட்டமைப்பைக் கொண்டதாகவும் பல்தேசிய இனங்கள் வாழும் நாட்டுக்குப் பொபருத்தமான தேர்தல் முறையை உடையதாகவும் ஆக்குதல்.

6. அரசியல் யாப்பு மற்றும் சட்டங்களினால் மட்டுமல்லாது நடைமுறை பூர்வமாக மனித உரிமைகளையும் மற்றும் அடிப்படை சுதந்திரங்களையும் உத்தரவாதப்படுத்துதல்

7. நீதித்துறை சட்டவாக்கம் நிறைவேற்திகாரம் ஆகிய அதிகாரங்களுக்கிடையில் சுயாதீனமும் முறையான பொருத்தப்பாடும் உடைய பரந்துபட்ட மக்களின் உண்மையான சமூக ஜனநாயகம் நிலை கொண்டதோர் செழிப்பான ஐக்கிய இலங்கையை உருவாக்குதல்.

## இயக்கத்தின் சமூக பொருளாதார அபிலாஷைகள்

1. உணவு, உடை, இருப்பிடம் இவை மூன்று அடிப்படைத் தேவைகளிலும் மக்களுக்கு இல்லை என்ற நிலை இல்லாதொழிதல் வேண்டும்.

2. வயது 18 வரை அனைவருக்கும் கட்டாய இலவச கல்வி உத்தரவாதம் செய்யப்படுதல் வேண்டும்.

3. சகல மக்களுக்கும் சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள் இலகுவாகக் கிடைத்தல் வேண்டும்.

4. சமூக அமைப்பின் பல்வேறு அம்சங்களிலும் பெண்கள் அனுபவிக்கும் கீழ்நிலைத்தனம் இல்லாதொழிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் நவீன உலகின் அனைத்து விவகாரங்களிலும் பெண்களுக்கு உரிய ஸ்தானத்தை சட்டபூர்வமாகவும் நடைமுறை பூர்வமாகவும் உறுதி செய்தல் வேண்டும்.

5. நியாயமானதும், கௌரவமானதுமான அளவிற்கு வாழ்க்கை வசதிகளைக் கொண்டிருக்கும் வகையாக அடிமட்ட மக்கள் போதியளவு வருமானத்தைப் பெற வழிவகை செய்தல் வேண்டும்.

6. சட்டம் ஒழுங்குக்கான நிறுவனங்களை எளிமையான சாதாரண மக்களுக்கும் நியாயமான சேவையாற்றக் கூடியவையாகவும் அவர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்பவையாகவும் சீர்திருத்தி அமைத்தல் வேண்டும்.

7. நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் அனைத்தையும் நாகரீக வளர்ச்சிக்கும் நவீன உலகுக்கும் பொருத்தமானவையாக திருத்தியமைத்தல் வேண்டும்.

8. நீதித்துறையை மக்களின் இயலுமைக்கேற்றதாகவும், இலகுவாக அணுகக்கூடியதாகவும் கண்மூடித்தனமாக சட்டத்தை மட்டுமல்லாது உண்மையான நீதியை நிலைநாட்டுவதாகவும் சீரமைப்புகள் செய்யப்படுதல் வேண்டும்.

9. உலகமயமாக்கலை எதிர் கொள்ளக் கூடிய வகையாக நாட்டின் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் இன்னமும் கொண்டிருக்கும் கிராமிய பொருளாதார அமைப்பில் புதுமைகள் செய்தல் வேண்டும்.

10.விரைவாக ஏற்பட்டு வரும் நவீன உலக பொருளாதார முன்னேற்றத்துக்கு இசைவாக நாட்டின் அனைத்துத் துறைகளிலும் விரைந்ததொரு தொடர்ச்சியாக உற்பத்தித்திறன் அதிகரிக்கும் ஒரு பொருளாதார அபிவிருத்தி காணப்படுதல் வேண்டும்.

11.இலங்கையின் அனைத்து மாநகரங்களும் நகரங்களும் சுத்தமும் அமைதியும் உடையவையாக நீண்டகால கண்ணோட்டத்துடன் நவீனமாக்கப்படல் வேண்டும்.

12. நாட்டின் ஜனநாயக அரசியல் மற்றும் நிர்வாக கட்டமைப்புகள் நேர்மையானதாகவும், வெளிப்படையானதாகவும் செயற்படும் நிலை உருவாக்கப்படுதல் வேண்டும்.

13. சாதிகள் என்ற அநாகரீகம் இல்லாததொரு சமூகம் வேண்டும்.

14. சமயங்களையெல்லாம் கடந்ததொரு சகோதரத்துவம் வேண்டும்.

மொத்தத்தில் சமநீதி, சமவாய்ப்புக்கள் சகோதரத்துவம் அமைதி முன்னேற்றம் ஆகியவை மிளிருகின்றதொரு இலங்கை உருவாக வேண்டும்.

## இயக்கம் நனவாக வேண்டும் என விரும்பும் தேசிய மற்றும் சர்வதேசியக் கனவுகள்

1. பரந்துபட்ட மக்கள் அனைவரினதும் நலன்களைப் பாதுகாக்கும் வகையாக பரந்துபட்ட மக்கள் அனைவரினாலும் உணர்வுபூர்வமாக நிர்ணயிக்கப்படும் ஒரு சமூக ஜனநாயக அமைப்பை உடையதாக இலங்கையின் அனைத்து பாகங்களும் அமைய வேண்டும்.

2. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் நேபாளம், பூட்டான், மாலைதீவு என்பன இணைந்த வகையாகவே இப்போதுள்ள தென்னாசிய நாடுகளின் கூட்டமைப்பு உள்ளது. அதனை ஓர் தனித்துவமான உற்பத்தி வர்த்தக வலயமாக்குவதற்கான முயற்சிகள் மிக விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன. அது மேலும் விரிவடைய வேண்டும்.

காலத்தாலும் கலாச்சாரங்களாலும் ஒருமைப்பாடுடைய ஆப்கானிஸ்தான் மற்றும் மியான்மார் எனும் பர்மாவும் இதில் இணையவேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் போல் ஓர் ஐக்கியம் மலர வேண்டும். பூமியின் நான்கில் ஒரு சனத்தொகையை அதாவது 1500 மில்லியன் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தென்னாசிய ஒன்றியம் இங்கு உருவாதல் வேண்டும். நாம் அதன் பெருமை மிக்க பிரஜைகளாக வேண்டும்.

3. எமது பூமியில் யுத்தங்களே இல்லாத நிலை வேண்டும். பொதுமக்களுக்கெதிரான ஆயுதங்கள் அனைத்தும் பூமியிலிருந்து ஒழிய வேண்டும். நாடுகள் அனைத்துக்குமிடையில் ஒன்றையொன்று பரஸ்பரம் மதிக்கின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழிக்கும் வகையாக ஒன்றுக்கொன்று உதவுகிற கூட்டுறவு அடிப்படையிலானதோர் உலக அரசியல் பொருளாதார உறவு வேண்டும். மூலதனம் உழைப்பு தொழில்நுட்பம் ஆகிய மூன்றும் தடையற்றரீதியில் உலகின் எந்தப் பாகத்தையும் நோக்கி பரஸ்பரம் ஒன்றுக்கு அமைவாக மற்றவை சுதந்திரமாக நகருகின்ற வகையான சந்தைப்போட்டிகள் அமைய வேண்டும். அத்துடன் எங்கும் எதிலும் ஜனநாயகம் மனிதாபிமானம் சமநீதி ஆகியவற்றை உயர்த்திப் பிடித்ததோர் புதிய உலக ஒழுங்கு ஒன்று ஏற்படல் வேண்டும்.

## துப்பாக்கி மனிதர்களின் தீர்ப்புக்கு எமது கண்டனம்




சுனாமியின் காரணமாக பல உயிர்கள் காவிகொள்ளப்பட்டு அந்த இயற்கை அனர்த்தத்தில் பல்லாயிரம் உயிர்கள் பலி கொள்ளப்பட்ட வேளை அதிர்ஸ்தவசமாக உயிர் பிளைத்துக்கொண்டு தனது உறவினர்களுடன் உயிரைத் தவிர மனித வாழ்வுக்கு தேவையான அனைத்தையும் இழந்து பரிதவித்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றும் மீட்புப்பணியில் ஈடுபட்டு மட்டு புனித மைக்கல் கல்லூரியில் தஞ்சம் புகுந்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைவருடனும் சேர்ந்து தன்னால் இயன்ற மனித சக்திக்குட்பட்ட சேவைகளை புரிந்த திரு. சுப்பிரமணியம் தயாநிதி திருச்செந்தூர், மட்டக்களப்பு. அவர்கள் 28-02-2005 அன்று பாக்ரோட் சந்தியில் சகோதரப்படுகொலை புரிபவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அன்னாருக்கு எமது அஞ்சலி

**சுனாமியால் பாதிக்கப்பட்டு மட்டு நெற்களஞ்சியசாலை நலன்புரி நிலையத்தில் வாழும் திருச்செந்தூர் கல்லடி மக்கள்**

## திருமலையில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன்





தி. சிறிதரன் 141a, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்